[1987 ஏப்ரல் 6

திருநெல்வேலி மாவட்டம் பாலையன் கால்வாய் குறுக்கே புதிய பாலம் கட்டுதல்.

307—(* வினா எண் 3289) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், மேலச்செவல் நகர பஞ்சாயத்து நயினார்குளம் மற்றும் கீழச்செவல் ஆகிய பகுதிகளின் அருகில் உள்ள பாலையன் கால்வாய் குறுக்கே பாலம் ஒன்று புதியதாக கட்டும் பணி எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்படும் பாலம் கட்டும் பணிக்கு உத்தேசமாக ரூ. 6.00 இலட்சம் தேவைப்படும். இப்பணி இதுவரை அரசின் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. இனிவரும் ஆண்டுகளில் திட்டப் பணியாக எடுத்துச் செய்வதற்காக தயாரிக்கப்பட்டுவரும் திட்டப் பணிகளின் தொகுப்பு பட்டியலில் (செல்ப் ஆப் ப்ராஜக்ட்) இப்பணியை சேர்த்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

1983-84-ல் தமிழகத்திற்கு கயிற்று வாரியம் ஒதுக்கிய நிதி.

308—(* வினா எண் 3888) திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின்கீழ் இயங்கும் கயர் போர்டின் (Coir Board) 1983-84 ஆம் நிதியில் தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு ஏதும் பெறப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1987 ஏப்ரல் 6]

திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனி வருகின்ற ஆண்டிலாவது மத்திய அரசின்கீழ் இயங்கி வருகின்ற காயர் போர்டின் நிதியிலிருந்து நிதியைப் பெற்று அந்த நிதியை தென்னை பொருள்களைச் சார்ந்த தொழில்கள், அவற்றின் வளர்ச்சி, ஆராய்ச்சி போன்றவற்றுக்கு பயன்படுத்த அரசு முன்வருமா? ஏனென்றால் அந்த காயர் போர்ட் நிறுவனம் கேரளா போன்ற மாநிலங்களுக்கு நிறைய நிதியை ஒதுக்கீடு செய்து தென்னை சார்ந்த தொழிலுக்கு அதனை அவர்கள் பயன்படுத்துகின்ற நிலை இருக்கிறது. அந்த வகையில் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இந்த நிறுவனத்திடமிருந்து நிதியைப் பெற்று நம்முடைய வேளாண்மைப் பல்கலைக் கழகம் அல்லது வேளாண்மைத் துறைக்கு அதனைக் கொடுத்து தென்னையைச் சார்ந்த தொழில்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள பிள்ளையார்பட்டி என்கிற கிராமத்தில் ஆறு லட்சம் ரூபாய் செலவில் காயர்போர்டின் சார்பில் தொழிற்சாலை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் நிதியை கேட்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அளவில் உள்ள எண்ணெய் மற்றும் எண்ணெய் வித்துக்கள் மற்றும் தென்னை சம்பந்தப்பட்ட நிறுவனம் கொச்சியில் தலைமையகத்தை நிறுவி நிறைய நிதிச் சலுகைகளைப் பெற்று தென்னை பற்றிய ஆராய்ச்சி செய்து நிறைய பயனடைந்தும் வருகிறார்கள். அதேபோல என்னுடைய தொகுதியில் வேப்பன்குளம் என்ற இடத்தில் தென்னை ஆராய்ச்சிப் பணியை வேளாண்மைப் பல்கலைக் கழகம் மேற்கொண்டு வருகிறது. வரும் ஆண்டிலிருந்து இம்மாதிரி இருக்கின்ற நிலையங்களை எல்லாம் பிள்ளையார்பட்டியில் புதிதாக அமைக்கின்ற இடத்தில் இணைத்து தென்னை பற்றிய

ஆராய்ச்சித் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்துவதற்கான விரிவான திட்டத்தை இந்த அரசு நடைமுறைப்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுசம்பந்தமான கருத்துரு ஏதும் இங்கு இல்லை. தனியாக அதுபற்றி ஆய்வு செய்யலாம்.

இராமேசுவரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையே கப்பல் போக்குவரத்து.

309—(* வினா எண் 6792) *திரு. இரா. தாமரைக்கனி:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரத்திற்கும், தலைமன்னாருக்கும் இடையே கப்பல் போக்குவரத்து தொடங்க தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்துமா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியா வந்துள்ளவர்கள் மீண்டும் ஸ்ரீலங்கா திரும்பும் நிலை ஏற்படும்பொழுது படகு போக்குவரத்து வேறு வகையிலில்லாமல் ஏற்கனவே நடைபெற்று வந்ததுபோல் தலைமன்னாருக்கும் இராமேசுவரத்திற்கும் இடையேதான் நடைபெறவேண்டும் என இந்திய அரசுக்குத் தமிழ்நாடு அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசும் இதனை கவனத்தில் கொண்டுள்ளது.

(முற்பகல் 10-30)

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்த நமது தமிழர்கள் எப்பொழுது அங்கே திரும்புவார்களோ அப்பொழுதுதான் இந்தக் கப்பல் விடப்படும் என்ற நிலையில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இப்பொழுதும் நம்முடைய தமிழர்கள் அங்கே அதிகமாக இருப்பதால்